இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 07-08-2025

# முதலமைச்சரின் மகத்தான சாதனை!

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை 11.19 விழுக்காடு என்ற அளவுக்கு உயர்த்தி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இது எந்த மாநிலமும் அடையாத சாதனையாகும். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால்தான் இந்த வெற்றியின் அருமை தெரியும். இந்தியாவிலேயே மிக விரைவாக வளரும் பொருளாதாரமாகத் திகழ்கிறது தமிழ்நாடு. இது வேறு எந்த பெரிய மாநிலமும் பெற்றிராத அபரிமிதமான பெரும் வளர்ச்சி!

**ஒன்றிய அமைச்சகத்தின் தரவுகளின்படி, 2024-25 ஆம் ஆண்டிற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களின் வளர்ச்சி புள்ளிவிவரங்கள் வெளியாகி இருக்கிறது.**

- ★ **உத்தரப்பிரதேசம் - 8.99 விழுக்காடு.**
- ★ **ஆந்திரப் பிரதேசம் - 8.21 விழுக்காடு.**
- ★ **தெலுங்கானா - 8.08 விழுக்காடு.**
- ★ **கர்நாடகா - 7.37 விழுக்காடு.**
- ★ **மகாராஷ்டிரா - 7.27 விழுக்காடு.**

**ஆனால் தமிழ்நாடு 11.19 விழுக்காடு ஆகும். தமிழ்நாட்டின் வெற்றி, தமிழ்நாட்டை இந்தளவுக்கு உயர்த்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் வெற்றி என்பது இதுதான்.**

இந்தியாவின் வளர்ச்சியையும் தமிழ்நாடு அடைந்து வரும் வளர்ச்சியையும் பாருங்கள்.

★ இந்திய அளவில் பொருளாதார வளர்ச்சி என்பது 2021-22 ஆகிய ஆண்டில் 9.7 விழுக்காடாக இருந்தது. அப்போது தமிழ்நாடு 7.89 விழுக்காடாக இருந்தது.

★ இந்திய அளவில் பொருளாதார வளர்ச்சி என்பது 2022-23 ஆகிய ஆண்டில் 7.6 விழுக்காடாக இருந்தது. அப்போது தமிழ்நாடு 6.17 விழுக்காடாக இருந்தது.

★ இந்திய அளவில் பொருளாதார வளர்ச்சி என்பது 2023-24 ஆகிய ஆண்டில் 9.2 விழுக்காடாக இருந்தது. அப்போது தமிழ்நாடு 9.26 விழுக்காடாக உயர்ந்தது.

★ இந்திய அளவில் பொருளாதார வளர்ச்சி என்பது 2024-25 ஆகிய ஆண்டில் 6.5 விழுக்காடாக இருக்கிறது. தற்போது தமிழ்நாடு 11.19 விழுக்காடாகஉயர்ந்துவிட்டது. இதுதான்தமிழ்நாட்டின், முதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வைக்குக் கிடைத்த வெற்றியாகும்.

14 ஆண்டுகளுக்குப்பின், மீண்டும் இரட்டை இலக்க வளர்ச்சியைத் தமிழ்நாடு எட்டி இருக்கிறது. 14 ஆண்டுகளுக்கு முன் இத்தகைய ஓர் வெற்றியை அடைந்தவர் அன்றைய முதலமைச்சர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் தான். 2010-11 நிதியாண்டில் தலைவர் கலைஞர் ஆட்சியில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 13.12 விழுக்காடாக இருந்தது. இப்போது இரட்டை இலக்கை இரண்டாம் கலைஞராம் இன்றைய முதலமைச்சர் அவர்கள் நிகழ்த்திக் காட்டி இருக்கிறார்கள்.

**2010 -11 ஆம் ஆண்டுகளில் 13.12**
**2011 -12 ஆம் ஆண்டுகளில் 7.4**
**2012 -13 ஆம் ஆண்டுகளில் 5.37**
**2013 -14 ஆம் ஆண்டுகளில் 7.6**
**2014 -15 ஆம் ஆண்டுகளில் 4.92**
**2015 -16 ஆம் ஆண்டுகளில் 8.24**
**2016 -17 ஆம் ஆண்டுகளில் 7.15**
**2017 -18 ஆம் ஆண்டுகளில் 8.59**
**2018 -19 ஆம் ஆண்டுகளில் 7.01**
**2019 -20 ஆம் ஆண்டுகளில் 3.25**
**2020 -21 ஆம் ஆண்டுகளில் 0.07**
**2021 -22 ஆம் ஆண்டுகளில் 7.89**
**2022 -23 ஆம் ஆண்டுகளில் 6.17**
**2023 -24 ஆம் ஆண்டுகளில் 9.26**
**2024 -25 ஆம் ஆண்டுகளில் 11.19**

**- இந்த பட்டியலைப் பாருங்கள். தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்த காலக்கட்டத்தில் 13.12 விழுக்காடாக இருந்ததை தரை மட்டத்துக்கு இறக்கியது அ.தி.மு.க. ஆட்சி. ஜெயலலிதா படுகுழியில் தள்ளினார். பழனிசாமி, பாதாளத்துக்கே கொண்டு போனார். வெட்கமே இல்லாமல், 'என் காலத்தில் தமிழ்நாடு வளர்ந்தது' என்று அவரால் மக்களைப் பார்த்து எப்படிச் சொல்ல முடிகிறது என்று தெரியவில்லை.**

தமிழ்நாடு அரசு, தனக்கென ஒரு கணிப்பை முன்பு வெளியிட்டு இருந்தது. அதைவிட அதிகமான வளர்ச்சியை பெற்றுள்ளது தமிழ்நாடு. முன்பு 9.69 விழுக்காடு என்று மதிப்பிடப்பட்ட 2024- 25ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் மாநிலப் பொருளாதார வளர்ச்சி விகிதம் தற்போது 11.19 ஆக அதிகரித்தும் இருக்கிறது.

சென்னை பொருளாதாரப் பள்ளியின் முன்னாள் இயக்குநர் கே.ஆர். சண்முகம், "மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் துறைகளின் வலுவான செயல்திறனே வளர்ச்சிக்குக் காரணம்" என்று கூறுவதாக 'தி இந்து' ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. "வலுவான ஏற்றுமதி செயல்திறன் மூலம் மாநிலம் தொடர்ந்து அதன் வளர்ச்சியைத் தக்க வைத்துக் கொண்டால், 2031-32 ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடையும் இலக்கை அடையும் பாதையில் உள்ளது. அதிக வளர்ச்சி விகிதம் குறைந்த நிதி மற்றும் வருவாய் பற்றாக்குறை மற்றும் கடன்-GSDP விகிதம் போன்ற நிதி குறியீடுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். 2024-25 ஆம் ஆண்டில் இருந்ததை விட அனைத்து முக்கிய துறைகளும் அரை சதவீதம் அதிகமாக வளர்ந்தால், நடப்பு ஆண்டில் (2025-26) மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி சுமார் 12 விழுக்காடு ஆக இருக்கலாம்" என்றும் அவர் கூறி இருக்கிறார். உறுதியாக இந்த வெற்றியையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்து காட்டுவார்கள்.

- ★ **இந்திய அளவை விட தமிழ்நாடு அதிகம் -**
- ★ **மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடு அதிகம் -**
- ★ **தமிழ்நாட்டில் 14 ஆண்டுகளுக்குப் பிறகு அதிகம் - என்று சொல்லத் தக்க வகையில் இதனை சாத்தியப்படுத்திய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவிப்போம்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (6.8.2025) முகாம் அலுவலகத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம் ஆகியோர் சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்தனர். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணை பொதுச் செயலாளர் வன்னியரசு, தலைமை நிலையச் செயலாளர் பாலசிங்கம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் சாமுவேல்ராஜ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மநில செயற்குழு உறுப்பினர் சந்தானம் ஆகியோர் உள்ளனர்.

## நாமக்கல்லில் முத்தமிழறிஞர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவு நாள்!

*நாமக்கல், ஆக. 7 -*

*தமிழ்நாட்டின் ஐந்து முறை முதலமைச்சராகவும், உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராகவும் விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளில் அவர்களின் நினைவை போற்றும் வகையில் இன்று (07.08.2025 - வியாழக் கிழமை) காலை 08.00 மணி அளவில் நாமக்கல் மோகனூர் சாலையில் அமைந்துள்ள அண்ணா சிலையிலிருந்து பரமத்தி சாலையில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் சிலை வரை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் அமைதி பேரணி சென்று தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளோம்.*

*இந்நிகழ்ச்சியில் ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள்,*

*உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாநகர உறுப்பினர்கள், கிளை, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் என அனைவரும் பெரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

*இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.*




கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.8.2025)சென்னை அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக நிர்வாகிகளைச் சந்திக்கும் நிகழ்வில் மதுரை மாவட்டம் திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

## நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில்

# 2538 இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகள் !

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஆக.7-**

**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் 2538 இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.8.2025) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் உதவிப் பொறியாளர், உதவி பொறியாளர் (திட்டமிடல்), இளநிலைப் பொறியாளர், தொழில்நுட்ப உதவியாளர், வரைவாளர், பணி மேற்பார்வையாளர், நகர திட்டமிடல் ஆய்வாளர் / இளநிலை பொறியாளர் (திட்டமிடல்), பணி ஆய்வாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 2538 இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

மாநிலத்தின் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை மேம்படுத்துதல், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல், நகர்ப்புர வசிப்பிடங்களில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட பாதாள சாக்கடைத் திட்டம், மழைநீர் வடிகால் திட்டம், சாலை மேம்பாட்டுப் பணிகள், நகர்ப்புர ஏழைகளுக்கு குடியிருப்புகளை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டங்களை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இத்துறையின் பணிகள் தொய்வின்றி நடைபெற காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படுகின்ற நகராட்சி நிருவாக இயக்குநரகம், பேரூராட்சிகளின் இயக்குநரகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியில் காலியாக உள்ள உதவி பொறியாளர், உதவி பொறியாளர் (திட்டமிடல்), இளநிலைப் பொறியாளர், தொழில்நுட்ப உதவியாளர், வரைவாளர், பணி மேற்பார்வையாளர், நகர திட்டமிடல் ஆய்வாளர் / இளநிலை பொறியாளர் (திட்டமிடல்), பணி ஆய்வாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகிய பணியிடங்களை நிரப்பிட 2.2.2024 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில், அண்ணா பல்கலைகழகம் மூலமாக 29.06.2024, 30.06.2024 மற்றும் 06.07.2024 ஆகிய நாட்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டய படிப்பு கல்வித் தகுதிக்கான பதவிகளுக்குரிய எழுத்துத் தேர்வுகள் தனித் தனியாக நடத்தப்பட்டு 20.09.2024 அன்று நேர்முகத் தேர்விற்குத் தேர்வு செய்யப்பட்ட நபர்களின் பட்டியல் வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 7.10.2024 முதல் 17.02.2025 வரை நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு 17.02.2025 அன்று தேர்வாளர்கள் பெற்ற மதிப்பெண்கள் வெளியிடப்பட்டது. தேர்வு எழுதிய 1,12,955 நபர்களில் 6,606 நபர்கள் தகுதியானவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களின் மதிப்பெண்கள் வெளியிடப்பட்டன. இக்காலியிடப்பணியிடங்களை நிரப்பிட 6,606 நபர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் இனசுழற்சி முறையில் 6,606 நபர்களுக்கு கலந்தாய்வில் கலந்து கொள்ள அழைப்பாணை அனுப்பப்பட்டது. 28.02.2025 முதல் 02.04.2025 வரை கலந்தாய்வு நடத்தப்பட்டு மதிப்பெண் மற்றும் இனசுழற்சி அடிப்படையில் இறுதியாக 2,538 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

மேற்படி தேர்வு செய்யப்பட்ட நபர்கள் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படுகின்ற நகராட்சி நிருவாக இயக்குநரகம், பேரூராட்சிகளின் இயக்குநரகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், நகராட்சி நிருவாக இயக்குநர் பி.மதுசூதன் ரெட்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், பேரூராட்சிகளின் இயக்குநர் எம்.பிரதீப்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (5.8.2025) தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, சென்னை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், துணை மேயர் மு.மகேஷ் குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள், செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.